முருகப்பெருமான் துணை

**மகான் அருள்நந்தி சிவாச்சாரியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

12.07.2021, திங்கட்கிழமை

1. வரம்தரும் வள்ளலே அரங்கா
வாழும் அண்ணலே தேசிகா
பரம்பொருள் தன்மை உலகோர்
பரிபக்குவமுற அடைய வேண்டி
2. வேண்டியே அவதாரம் நிகழ்த்தி
வேலவன் சக்தியான ஞானியே
தொண்டெனும் உன்சேவை மெச்சி
துல்லிய ஆசி அருள்நந்தி சிவாச்சாரியார் யானும்
3. யானும் பிலவ மிதுன திங்கள்
எழுநான்கு திகதி சோமவாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 28ம் நாள், 12.07.2021 திங்கட்கிழமை)
ஞானபலம் பெறவே உரைப்பேன்
நன்னெறி காட்டும் அரங்கனே கலியின்
4. கலியின் சிறந்த தவசியே
கடவுளின் அம்சமாக வந்து
அழியாமை தனை மக்களுக்கு
அருளமுதாக தரும் ஞானியே
5. ஞானியே உமைவணங்கி வந்திட
நம்பிக்கை தரும் வாழ்வாக மாறி
துணிவுபட  அரங்கன் சீடரென
துன்பம் போக்கும் சேவையாக உருவெடுத்து
6. உருவெடுத்து உலகம் மாற்றம் பெறும்
உண்மையான ஞானவாழ்வு தரும்
குருவாக அரங்கன் தரும் ஞானம்
குவலயமெங்கும் சூட்சுமபலமாக வந்து
7. வந்துமே கலியின் இடர்நீக்கி
வசந்தமான வளமானசிந்தனை
சிந்தை கலந்து இனிதே பெருகி
சிறப்பான ஞான ஆட்சியாக மலரும்
8. மலருமே முருகக் கடவுளின்
மகா சூட்சும வெளிப்பாடாக
வளருமே அரங்கன் தொண்டர்படை
வையகம் காப்பும் நோக்கம்
9. நோக்கமே முதன்மையாகவே
நிலவுலகில் நிறைவேறியே மாற்றம்
தேக்கமின்றி அரங்கேறும்
தெய்வ சக்தியாக மாறும்

10. மாறுதலின் சூட்சும வழியில்
மகான் அரங்கன் பலமே
ஆறுதலாக மக்களிடை இருக்க
அனுகி வந்த மக்களும்

11. மக்களும் மண்ணின் சக்தியும்
மாண்பு கூடி புகழ்பெறும்
ஆக்கம்பட ஞான ஆளுமையாகும்
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–